# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, இலங்கை இயற்கை மூலவளன்கள், சத்தி, அறிவியல் அதிகாரசபைச் சட்டம்

---

*[1981, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1982, சனவரி மாதம் 01 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.10* *தபாற் செலவு : சதம் 75*

## 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, இலங்கை இயற்கை மூல வளன்கள், சத்தி, அறிவியல் அதிகாரசபைச் சட்டம்

[1981, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 39/80
1464

**இலங்கை இயற்கை மூலவளன்கள், சத்தி, அறிவியல் அதிகாரசபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அவ்வதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் குறித்துரைப்பதற்கும்; 1975 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அறிவியற் பேரவைச் சட்டத்தை நீக்குவதற்கும்; மேற்சொல்லப்பட்ட கருமங்களோடு தொடர்புபட்டவையும் அவற்றின் இடைநேர்விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டமானது, 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, இலங்கை இயற்கை மூலவளன்கள், சத்தி, அறிவியல் அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (அது இச்சட்டத்தில் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

### இலங்கை இயற்கை மூலவளன்கள், சத்தி அறிவியல் அதிகாரசபையைத் தாபித்தல்

**இலங்கை இயற்கை மூலவளன்கள், சத்தி அறிவியல் அதிகாரசபையைத் தாபித்தல்.**

2. இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும், இலங்கை இயற்கை மூலவளன்கள், சத்தி, அறிவியல் அதிகாரசபை என்றழைக்கப்பட வேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், அப்போதைக்கு அதிகாரசபையின் உறுப்பினர்களாகவிருக்கின்ற ஆட்களை அது கொண்டமைதலும் வேண்டும்.

**அதிகாரசபை கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் என்பது பற்றி.**

3. அதிகாரசபையானது, 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறுவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

**அதிகாரசபையின் உறுப்பினர்கள்.**

4. (1) இயற்கை மூலவளன்கள், சத்தி, வலு, அறிவியல், தொழினுட்பவியல் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட கருமங்களில் அனுபவம் பெற்றிருந்தவர்களும் அல்லது அவற்றில் திறமையுள்ளவர்களும் என அமைச்சருக்குத் தோன்றும் ஆட்களிடையேயிருந்து அவரால் நியமிக்கப்படும் பதினைன்றிற்கு மேற்படாத உறுப்பினர்களை அதிகாரசபை கொண்டிருத்தல் வேண்டும்.

2—எ 57792—6,525 (08/81)

(2) அமைச்சர், அதிகாரசபையின் உறுப்பினர்களுள் ஒருவரை அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினுல், பதவி துறப்பதனுல் அல்லது பதவியினின்றும் அகற்றப்படுவதனுல் பதவியை முன்னராகவே வறிதாக்கினுலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றுண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர், அவ்வாறு செய்தல் உசிதமானதென அவர் கருதினுல், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அகற்றுவதற்கான காரணமெதனையும் குறிப்பிடாது, அதிகாரசபையின் உறுப்பினர் எவரையும் அகற்றலாம்.

(5) அதிகாரசபையின் எந்தவோர் உறுப்பினர் தொடர்பாக அமைச்சரால் (4) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த உறுப்பினர், அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் உறுப்பினர் எவரும், (4) ஆம் உட்பிரிவின்கீழ் அகற்றப்படுதலானது ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப் படுதலாகாது.

(7) அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர், எந்நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியைத் துறக்கலாமென்பதுடன், அத்தகைய பதவிதுறப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சர் அத்தகைய உறுப்பினருக்கு எழுத்தில் அறிவிக்கும்வரை அத்தகைய பதவிதுறப்பானது பயனுறுவதாதலும் ஆகாது.

(8) அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர் இறப்பின் அல்லது பதவி துறப்பின் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படின், அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குத் தகுந்த கவனம் செலுத்தி, இறக்கும், பதவிதுறக்கும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் உறுப்பினரின் இடத்தில் உறுப்பினரொருவராயிருக்கவென வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், முன்னரே பதவி துறந்தால் அல்லது இறப்பினுல் அல்லது அகற்றப்படுவதனுல் முன்னரே பதவியை வறிதாக்கினுலொழிய, அவர் எந்த உறுப்பினரை அடுத்தாற்றுரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(10) அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இயலாமை காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராயிருக்குமிடத்து, அமைச்சருக்கு அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் அறிவித்தல் அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குத் தகுந்த கவனம்செலுத்தி, அவரது இடத்தில் செயற்படுவதற்கென வேறோராளை நியமிக்கலாம்.

5. ஆளொருவர்— *அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதினின்றும் அல்லது இருப்பதினின்றும் தகைமையீனம்.*

(அ) அவர் பாராளுமன்ற அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபை உறுப்பினர் ஒருவராகவிருப்பின் அல்லது ஒருவராகவரின்; அல்லது

(ஆ) அவர் ஓர் இலங்கைப் பிரசையல்லாவிடின் அல்லது இலங்கைப் பிரசையாகவில்லாதொழியின்; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் அவர், சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது சித்தசுவாதீனமற்றவர் என வெளிப்படுத்தப்பட்டால்; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனையை அவர் அனுபவிக்கிறாரெனில் அல்லது அனுபவித்திருந்தாரெனில்,

அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதினின்றும் அல்லது தொடர்ந்திருப்பதினின்றும் தகைமையற்றவராதல் வேண்டும்.

6. (1) அதிகாரசபையின் இலச்சினையானது, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டு உருவமைக்கப்படலாம் என்பதுடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகையவொரு முறையில் மாற்றஞ் செய்யவும்படலாம். *அதிகாரசபையின் இலச்சினை.*

(2) அதிகாரசபையின் இலச்சினை, அதிகாரசபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினையானது அதிகாரசபையின் அனுமதியுடனல்லாதும் அத்துடன் அதிகாரசபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றியும் ஏதேனும் சாதனத்திற்கு அல்லது ஆவணத்திற்கு பொறிக்கப்படுதலாகாது. அவ்விரு உறுப்பினர்களும் அவர்கள் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்களின் அல்லது ஆவணங்களின் இடாப்பொன்றை அதிகாரசபை பேணுதல் வேண்டும்.

7. நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம். *உறுப்பினர்களின் ஊதியம்.*

8. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டுநடாத்துகையையும் அதிகாரசபை ஒழுங்குபடுத்தலாம். *அதிகாரசபையின் நடவடிக்கைகள்.*

(2) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அவர் சமுகமாயிருக்கின்ற அதிகாரசபையின் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அதிகாரசபையின் கூட்டம் எதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதி வருகை தராதிருக்கையில், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கலாம்.

(3) அதிகாரசபையின் கூட்டம் எதற்கும் தலைமைதாங்கும் ஆள், அவரது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் கூட்டமெதற்குமான கூட்ட நடப்பெண் ஆறு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) உறுப்பினர்களிடையே உள்ளதான ஏதேனும் வெற்றிடம், அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் அதிகாரசபையின் செயலெதுவும் அல்லது நடவடிக்கை எதுவும் வலிதற்றதாதலாகாது.

## பாகம் II

### அதிகாரசபையின் கடமைகளும் பணிகளும் தத்துவங்களும்

அதிகாரசபையின் கடமைகளும் பணிகளும்.

9. அதிகாரசபையின் கடமைகளும் பணிகளுமாவன—

(அ) அமைச்சருக்கு—

(i) அறிவியலையும், தொழினுட்பத்தையும் இலங்கையிலுள்ள மக்களின் நலனுக்காகப் பிரயோகிப்பதில் தேசிய தன்னம்பிக்கையை ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான வழிவகைகள் தொடர்பாக ;

(ii) தேசிய நலனுடன் ஒவ்வும் விதத்தில் இலங்கை இயற்கை மூலவளன்களை முகாமைசெய்தற்கும் அபிவிருத்தி செய்தற்குமான கொள்கையும் வழிவகைகளும் தொடர்பாக ;

(iii) இலங்கையின் சத்தி பற்றிய தேவைப்பாடுகளின் எல்லா அம்சங்கள் சார்பான கொள்கையும் அதேபோல் இலங்கைச் சத்தி மூலவளன்களின் பரந்துபட்ட அபிவிருத்திக்கான திட்டங்களும் செயற்றிட்டங்களும் அத்துடன், சத்தியின் உச்சநலன் பாவனைக்கும், பேணிப் பாதுகாத்தற்கும் ஆன வழிமுறைகளும் தொடர்பாக ;

(iv) அறிவியற் கொள்கையொன்றினை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் அத்துடன் அதன் மீளாய்வும் தொடர்பாக ;

(v) தொழினுட்பக் கொள்கையொன்றினை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் அத்துடன், அதன் மீளாய்வும் தொடர்பாக;

(vi) இயற்கை மூலவளன்களினதும் சத்தியினதும் பயன்கொள்ளலும், அபிவிருத்தியும் சம்பந்தமான திட்டங்களதும் செயற்றிட்டங்களதும் ஆளுகையும், முகாமையும், நெறிப்படுத்துகையும், அத்துடன், இலங்கையின் அபிவிருத்திக்காக, இயைபானதும் தொடர்புடையதும் ஆன அரசாங்கத் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூரதிகாரசபைகள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசிடமிருந்து நிதியுதவி பெறுவதும் இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் விடயத்திற்கேற்றாற் போன்று பதிவு செய்யப்பட்டுள்ளதும் அல்லது கூட்டிணைக்கப்பட்டுள்ளதும் ஆன வேறு ஏதேனும் ஆட்கள் குழு மூலமாக அறிவியலையும் தொழினுட்பவியலையும் பிரயோகித்தலும் பயன்படுத்தலும் தொடர்பாக;

(vii) இயற்கை மூலவளன்களினதும், சத்தி மூலவளன்களினதும் அபிவிருத்திக்கும் அத்துடன் அறிவியல், தொழினுட்பவியல் ஆராய்ச்சிக்கும் என நிதியங்களை ஒதுக்குதல் தொடர்பாகவும்; அத்துடன்

(viii) சனாதிபதியினால் அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்தப்படக் கூடியவாறான வேறேதேனும் கருமங்களும் தொடர்பாக,

ஆலோசனை கூறுதலும்;

(ஆ) இயற்கை மூலவளன்கள் பற்றியும், அவற்றின் முறைமையான, ஒத்திசைவான பயன்கொள்ளலும் அபிவிருத்தியும், மூலவளன்களின் பயன்கொள்ளலும் பயன்பாடும், சத்தியைப் பேணிக்காத்தலும் அத்துடன், அறிவியல், தொழினுட்ப கருமங்கள் சார்பான ஏதேனும் அம்சம் தொடர்பான தகவலைச் சேர்த்தலும் பரப்புதலும் அவை தொடர்பான அறிக்கைகளையும் பருவ வெளியீடுகளையும் பத்திரிகைகளையும் வெளியிடுதலும் அத்தகைய கருமங்கள் தொடர்பாக பொதுமக்கள் தகவல்களும் கல்வியும் பெறுதற்கு ஏற்பாடு செய்தலும்;

(இ) இயற்கை மூலவளன்களை அபிவிருத்தி செய்தலும், சத்தியைப் பேணிக்காத்தலும் அபிவிருத்தி செய்தலும் தொடர்பான கருமங்கள் சார்பாகவும் அறிவியலும் தொழினுட்பவியலும் தொடர்புடையதும் ஆன கருமங்கள் சார்பாகவும் இலங்கையிலும் வேறு நாடுகளிலும், தனியாட்களுடன், கழகங்களுடன் அல்லது தாபனங்களுடன் இணைப்பைத் தாபித்தலும், பேணிவருதலும்;

(ஈ) (i) இலங்கையிலுள்ள அறிவியல், தொழினுட்பவியற் பணியாளர்களை பயனுறத்தக்கவகையில் பயன்படுத்துதல் பற்றியும்;

(ii) இலங்கையின் அறிவியற் கொள்கையைச் செயற்படுத்துதற்கு எதிர்காலத்தில் அறிவியல் தொழினுட்பவியல்சார் மனித சத்தித் தேவைப்பாடுகள் பற்றியும் ; அத்துடன்

(iii) எதிர்கால அறிவியல், தொழினுட்பவியல்சார் மனித சத்தித் தேவைப்பாடுகளைச் சமாளிப்பதற்குப் போதுமான அளவு பயிற்சி வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதற்கு எடுக்கவேண்டிய நடபடிகள் பற்றியும்,

ஆராய்ந்து அறிக்கைசெய்தலும் ;

(உ) இலங்கையில் அறிவியல், தொழினுட்பவியல், கல்வி, சமூகவியல், பொருளாதாரக் கருமங்கள் தொடர்புடைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களைக் கவனத்துக்கெடுத்தலும் அறிக்கை செய்தலும் ;

(ஊ) பின்வரும் குறிக்கோள்களுடன், அதாவது—

(i) இலங்கை மூலவளன்களின் அபிவிருத்தி ;

(ii) இலங்கை மக்களின் நலனை மேம்படுத்துதல் ; அத்துடன்

(iii) பொதுவாக இலங்கையில் அறிவியலையும் தொழினுட்பவியலையும் முன்னேற்றுதல்,

ஆகிய குறிக்கோள்களுடன் அறிவியல், தொழினுட்பவியல் ஆராய்ச்சியைத் தொடக்கிவைத்து, உதவியளித்து, ஆதரித்தலும் ; அத்துடன்

(எ) இலங்கையில் அறிவியலினதும் தொழினுட்பவியலினதும் அபிவிருத்திக்கு அவசியமாகக்கூடியவாறான வேறு அத்தகையவற்றைச் செய்தலும்,

ஆதல் வேண்டும்.

அதிகாரசபையின் தத்துவம்.

10. அதிகாரசபையானது, அதனது கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியதான அல்லது உசிதமானதான அத்தகைய தத்துவங்களையும், உரிமைகளையும் அதிகாரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக—

(அ) இலங்கையின் இயற்கை மூலவளன்களைப் பாதுகாத்தல், அபிவிருத்தி என்பவற்றின் ஏதேனும் அம்சம் தொடர்பான ஆராய்ச்சியையும் அளவீடுகளையும் நுண்ணாய்வுகளையும் தொடக்கிவைக்கலாம், ஊக்குவிக்கலாம், நடாத்தலாம் அத்துடன் ஒருங்கிணைக்கலாம் ;

(ஆ) சத்தி மூலவளன்களின் நாடித் தேடுகை, பயன்பாடு, அபிவிருத்தி என்பவற்றின் ஏதேனும் அம்சம் தொடர்பாக ஆராய்ச்சியையும் அளவீடுகளையும் நுண்ணாய்வுகளையும் தொடங்கிவைக்கலாம், ஊக்குவிக்கலாம் நடாத்தலாம் அத்துடன் ஒருங்கிணைக்கலாம் ;

(இ) ஆராய்ச்சி வசதிகளுக்காக கட்டிடங்களையும் ஆய்வுகூடங்களையும் கட்டியெழுப்பலாம், சாதனமிடலாம் அத்துடன் பேணலாம் அல்லது ஒன்றில் தனியாக அல்லது வேறு எவரேனும் ஆளுடன் கூட்டாக ஆராய்ச்சிச் செயல் திட்டம் எதனையும் தொடக்கலாம்,

(ஈ) இயற்கை மூலவளங்களினதும் சக்தி மூலவளங்களினதும் நாடித் தேடுகை, பயன்பாடு, அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்பு பட்ட வேலைக்கெனவும் விஞ்ஞானத்துடனும் தொழினுட்பவியலுடனும் தொடர்புபட்ட வேலைக்கெனவும் ஆராய்ச்சி இணையுரிமைப் பரிசில்களையும் ஆராய்ச்சிப் பரிசில்களையும், புலமைப்பரிசில்களையும், பரிசுகளையும், பதக்கங்களையும் தொடங்கி, வழங்கலாமென்பதுடன், இத்துறைகளில் ஆராய்ச்சியை முன்னேற்றுவதற்காக ஓர் ஆராய்ச்சி நிதியத்தை அல்லது நிதியங்களை தாபித்து முகாமைசெய்யவும் செய்யலாம் ;

(உ) ஒரு குறித்துரைக்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டத்தை அல்லது திட்டங்களைத் தொடங்குவதற்கு அல்லது தொடருவதற்கு எவரேனும் அறிவியலாளருக்கு அல்லது தொழினுட்பவியலாளருக்கு அல்லது அத்தகைய ஆட்கள் குழுவொன்றுக்கு அல்லது ஏதேனும் ஆராய்ச்சி நிறுவகத்துக்கு அல்லது ஏதேனும் பல்கலைக்கழகத்துக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட அறிவியற் குழுவுக்கு வழங்குகைகளைச் செய்யலாம் ;

(ஊ) அறிவியல், தொழினுட்பவியல் ஆவணப்படுத்துகை நிலையமொன்றைத் தாபித்துப் பேணலாம் ;

(எ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை இறுதி விருப்பாவணத்தினூடு உரித்துமாற்றப்படுதல் அல்லது வேறு விதமாக அதனில் உரித்து வந்தடையக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெற்று வைத்திருக்கலாம் என்பதுடன், அதிகாரசபையின் விதிகளுக்கமைவாக அதனை விற்கலாம் ஈடுவைக்கலாம், குத்தகைக்கு விடலாம், மானியக்கொடையாக வழங்கலாம், அதன் உரிமையை மாற்றலாம், உரிமையைக் கொடுக்கலாம், ஒதுக்கலாம், கொடுத்து மாற்றலாம் அல்லது வேறுவிதமாகக் கையுதிர்க்கலாம் ;

(ஏ) அதிகாரசபையின் பணிகளைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஊழியர்களையும் முகவர்களையும் நியமிக்கலாம் ; அத்துடன், அத்தகைய ஊழியர்களுக்கும் முகவர்களுக்கும் செலுத்தப்பட வேண்டியதான அத்தகைய ஊதியத்தையும் தீர்மானிக்கலாம் ;

(ஐ) அதிகாரசபை அலுவல்களின் நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்கலாம் ;

(ஒ) அதிகாரசபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபையின் பணங்களை முதலீடு செய்யலாம் ;

(ஓ) அதன் சேவையின் ஏதேனும் அம்சத்தில் அதிகாரசபைக்கு உதவி புரிவதற்கு அமைச்சரின் அங்கீகாரத்துடன் செயற் குழுக்களைத் தாபிக்கலாம் அத்தகைய குழுக்களின் வேலை நோக்கெல்லையையும் வரையறுக்கலாம் ; அத்துடன், அத்தகைய குழுக்களுக்கு அமைச்சரின் அங்கீகாரத்துடன், ஆட்களை நியமிக்கலாம் ; அத்துடன்

(ஔ) அதிகாரசபையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் இடைநேர்விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையினவான அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்யலாம்.

அமைச்சரின் பணிப்புகளுடன் அதிகாரசபை இணங்கியொழுகுதல் வேண்டும்.

**11.** அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அமைச்சரானவர், அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடனோ அல்லது அல்லாதோ அவர் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் எழுத்திலான, பொதுவான அல்லது விசேடமான பணிப்புரைகளை வழங்கலாம் என்பதுடன், அதிகாரசபையானது அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுதலும் வேண்டும்.

## பாகம் III

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி.

**12.** (1) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் ஆதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைவாக, பணிப்பாளர் தலைமையதிபதியானவருக்கு, அதிகாரசபையின் அலுவல்களை நெறிப்படுத்தல், அதிகாரசபையை ஒழுங்கமைத்தல், அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதல், அதிகாரசபை ஊழியர்களின் நிருவாகம், கட்டுப்பாடு ஆகியன பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதிப் பதவியில் வெற்றிடம் எதுவும் ஏற்படுமாயின், அல்லது லீவு, சுகவீனம் அல்லது வேறு காரணத்தினால் பணிப்பாளர் தலைமையதிபதி தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருந்தால், அதிகாரசபையானது, இயன்ற அளவு விரைவாகவும் அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அமைவாகவும் பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்கென வேறொருவரை நியமித்தல் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதியின் நியமனம் ஆதியன.

**13.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின் மற்றைய ஏற்பாடுகளுக்கமைவாக—

(அ) அதிகாரசபையின் பணிகளைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமென அதிகாரசபையினால் கருதப்படக்கூடியவாறான அத்தகைய பணியாட்டொகுதியை நியமிக்கலாம், நீக்கலாம் என்பதுடன் அதன்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம்;

(ஆ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் கூலியை அல்லது சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தை நிருணயிக்கலாம்;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவையின் நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) சகாய நிதியங்களை அல்லது திட்டங்களை அத்தகைய பணியாட்டொகுதியினரின் நலனுக்காக தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகைகள் வழங்கவும் வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது ஏதேனும் கருமம் தொடர்பாக அதிகார சபையினுல் விதிகள் ஆக்கப்படலாம்.

(3) அதிகாரசபையின் வேண்டுகோளின்மீது பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினுல் தீர்மானிக்கப்படக்கூடிய வாறன அத்தகைய காலப்பகுதிக்கு அதையொத்த சம்மதத்துடன் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவை அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவை அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(6) அரசாங்கத்துடனை ஒப்பந்தமொன்றின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றுக்கு அரசாங்கத்துக்குச் சேவை செய்ய உடன்பட்டுள்ள ஆளெவரையும் அதிகாரசபை வேலைக்கமர்த்துமிடத்து, அவ்வாளினுல் அதிகாரசபைக்குச் சேவை புரியப்பட்ட காலப்பகுதி எதுவும் அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்குச் சேவை புரியப்பட்ட காலப்பகுதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரசபையின் வேண்டுகோளின்மீது, உள்ளூராட்சிச் சேவையின் எந்த உறுப்பினராவது அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் வேறு எவரேனும் அலுவலராவது அல்லது சேவையாளராவது, விடயத்துக்கேற்றூற்போன்று, அத்தகைய உறுப்பினரதும் அலுவலரதும் அல்லது சேவையாளரதும் அத்துடன் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினதும் அல்லது அந்த உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்துடன் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு, அதிகாரசபையினுல் அதையொத்த சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறன அத்தகைய காலப்பகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன், விடயத்திற்கேற்றூற்போன்று அதிகாரசபையினுலும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினுலும் அல்லது உள்ளூர் அதிகாரசபையி

றும் உடன்படக்கூடியவாறான ஓய்வூதியம் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட, அத்தகைய நியதிகளின்மேலும் நிபந்தனைகளின் மேலும் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு எவரேனும் ஆள் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் IV

### நிதி

அதிகாரசபையின் நிதியம்.

14. (1) அதிகாரசபை அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நிதியத்திற்கு—

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டிற்கென பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) அதிகாரசபை அதனது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், கொடைகள், நன்கொடைகள், அல்லது மானியக்கொடைகள் எனும் வகையாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) அதிகாரசபையின் வரவில் திரளுவதான எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் அலுவல்களை முகாமைசெய்கையிலும், அதிகாரசபைத் தொழிலின் கொடுக்கல் வாங்கலிலும், அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கும், அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் ஊதியக் கொடுப்பனவிலும் இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ், அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் கடமைகளைப் புரிவதிலும் பணிகளை நிறைவேற்றுவதிலும் அத்துடன் அதிகாரசபை காலத்திற்குக் காலம் அதிகாரமளிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நோக்கங்களுக்காகவும் உறப்பட்ட ஏதேனும் செலவுகளைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அதிகாரசபையின் நிதியத்தை அதிகாரசபையானது பயன்படுத்தலாம்.

அதிகாரசபையின கடன் வாங்கல் தத்துவங்கள்.

15. அதிகாரசபையானது, அமைச்சரின் சம்மதத்துடன் அல்லது அவரால் கொடுக்கப்பட்ட ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, மேலதிகப்பற்று என்றவகையாக அல்லது வேறு வகையாக இச்சட்டத்தின்கீழ் அதனது கடமைகளைப் புரிவதில் அதிகாரசபையின் கடப்

பாடுகளைச் சமாளிப்பதற்கு அதிகாரசபை தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைத் தற்காலிகமாகக் கடன் வாங்கலாம் :

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் பெறப்பட்ட ஏதேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பாக எஞ்சியிருக்கும் தொகைகளின் கூட்டு மொத்தமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையின்பின் அமைச்சரால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

நிதியாண்டும் அதிகாரசபையின் கணக்குகளைக் கணக்காய்தலும்

16. (1) அதிகாரசபையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் வரவுசெலவும் சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் வேறு கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்கேடுகளை அதிகாரசபை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகார சபைக் கணக்குகளின் கணக்காய்வுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் V

## பொது

தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் கையளித்தல்

17. (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்களில், கடமைகளில் அத்துடன் பணிகளில் எவற்றையேனும், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு, உள்ளூரதிகாரசபைக்கு அல்லது அதிகாரசபையினால் தாபிக்கப்பட்ட செயற்குழுவுக்கு கட்டளைமூலம் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று எந்நேரத்திலும் அதிகாரசபையினால் ஒழிக்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று—

(அ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி அத்தகைய அரசாங்கத் திணைக்களம் தொடர்பாக :

(ஆ) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பாக ; அத்துடன்

(இ) உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி ஏதேனும் உள்ளூரதிகாரசபை தொடர்பாக,

அதிகாரசபையினால் ஆக்கப்படுதலாகாது

அதிகாரசபையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்

18. அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபை இலஞ்சச் சட்டத்தின்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

**19.** அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின்கீழ் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது எடுக்கப்பட்ட செயலுக்கான பாதுகாப்பு.

**20.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயலுக்காக அதிகாரசபைக்கெதிராக ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயலுக்காக அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக ஏதேனும் தொடர்ச்சியோ அல்லது குற்றவழக்கோ அமைதலாகாது.

(2) அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட செலவு எதுவும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையினால் அறவிடப்பட்ட செலவுத்தொகைகள் எவையும் அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது எவரேனும் ஆளினால் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் செயலெதுவும் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னராக அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆள் எவரினாலும் உறப்பட்ட செயல் எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்தில் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால் அத்தகைய செலவு அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவருக்கெதிராகவோ அல்லது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

**21.** அதிகாரசபைக்கு எதிராகக் கொணரப்படும் வழக்கெதிலும் ஆளுக்கு அல்லது ஆதனத்துக்கு எதிரான எழுத்தாணை எதுவும் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவருக்கெதிராக வழங்கப்படுதலாகாது.

22. (1) எக்கருமங்கள் தொடர்பாக இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பாக அல்லது எவையேனும் தொடர்பாக அதிகாரசபையானது விதிகளை ஆக்கலாம். விதிகளை ஆக்குவதற்கான அதிகாரசபையின் தத்துவம்.

(2) அமைச்சரால் அங்கீகரிக்கப்படும்வரை இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் பயனுடையதாதலாகாது.

23. (1) அசைவற்ற ஏதேனும் ஆதனம் அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்திற்குக் கொள்ளப்பட வேண்டப்படுமிடத்தும், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரிக்குமிடத்தும், அத்தகைய ஆதனம் பொது நோக்கமொன்றிற்குத் தேவைப்படுகின்றதெனக் கருதப்பட வேண்டுமென்பதோடு அதற்கிணங்க காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு அதிகாரசபைக்கு கைமாற்றவும் படலாம். காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

(2) அதிகாரசபைக்கென காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுவதற்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகை அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

24. (1) அரசின் அசைவற்ற ஏதேனும் ஆதனம் அதிகாரசபையின் நோக்கத்திற்கெனத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிக் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் சிறப்புக் கொடையொன்று அல்லது குத்தகையொன்று செய்யப்படக்கூடிய நோக்கமெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க அக்கட்டளைச்சட்ட ஏற்பாடுகள், அத்தகைய ஆதனத்தின் அதிகாரசபைக்கான சிறப்புக் கொடையொன்றிற்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையதாதல் வேண்டும். அசைவுள்ளதும் அசைவற்றதுமான அரச ஆதனத்தை அதிகாரசபைக்கு கிடைக்கக்கூடியதாகச் செய்தல்.

(2) அரசின் அசைவுள்ள ஏதேனும் ஆதனம் அதிகாரசபையின் நோக்கத்திற்கெனத் தேவைப்படுமிடத்து, அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்குக் கைமாற்றி அதற்குரித்தாக்குதல் வேண்டும்.

25. (1) இச்சட்டத்தின் 9 ஆம், 10 ஆம் பிரிவுகளின்கீழ் அதனது தத்துவங்கள், கடமைகள், பணிகள் எவற்றையும் அதிகாரசபை பிரயோகிக்க, புரிய, நிறைவேற்ற இயலச்செய்யும் நோக்கத்துக்காக, அதிகாரசபை, அல்லது அதன்சார்பில் அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல்மூலம், அதிகாரசபைக்கு அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய எல்லாத் திரட்டுகளையும், அல்லது தகவல்களையும், அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய காலத்தினுள் கொடுத்துதவுமாறு, எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம். திரட்டுகளும் தகவல்களும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்றினால் ஏதேனும் திரட்டை அல்லது தகவல்களைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்படும் எவரேனும் ஆள், ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய திரட்

டைக் கொடுப்பதினின்றும் அல்லது அத்தகைய தகவல்களை வெளிவிடு வதினின்றும் அத்தகைய ஆள் தடுக்கப்பட்டுள்ளவிடத்துத் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்தினுள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவது அவரின் கடமையாதல் வேண்டும்.

ஏதேனும் காணிக்குள் அல்லது வளவுக்குள் புகுவதற்குள்ள தத்துவம்.

**26.** அதிகாரசபையினால் அதற்கெனப் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், ஏதேனும் காணியின் அல்லது வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு எழுத்தில் ஆகக் குறைந்தது பதினன்கு நாள் அறிவித்தல் கொடுத்த பின்பு, அத்தகைய காணிக்குள் அல்லது வளவுக்குள் புகுந்து அதிகாரசபையின் ஏதேனும் வேலையைச் செய்யும் நோக்கத்திற்கு அல்லது அதிகாரசபையின் தத்துவத்தைப் பிரயோகித்தற்கு அல்லது பணியைப் புரிவதற்கு ஆரம்ப நடவடிக்கையான அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் புலனாய்வை அல்லது சோதனையைச் செய்யும் நோக்கத்திற்கு நியாயமான முறையில் அவசியமாகக்கூடிய அத்தகைய செயல்களைச் செய்யலாம்.

தவறுகளும் தண்டங்களும்.

**27.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன் நோக்கங்களுக்காக செய்யப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் திரட்டில் அல்லது வேறு ஆவணத்தில் ஏதேனும் பொய்யான அல்லது பிழையான கூற்றைத் தெரிந்துசெய்யும்; அல்லது

(ஆ) அவரினால் கொடுத்துதவப்பட வேண்டுமென இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது திரட்டை அளிக்கத் தவறும் அல்லது மறுக்கும்; அல்லது

(இ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அந்த ஆளுக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை, அல்லது கடமையைப் பிரயோகித்தலில், அல்லது நிறைவேற்றுதலில், புரிவதில் எந்தவோர் ஆளையாவது தடுக்கும் அல்லது முட்டுக்கட்டையிடும்; அல்லது

(ஈ) அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக அல்லது அலுவலர் ஒருவராக அல்லது சேவையாளர் ஒருவராகவிருந்து இச்சட்டத்தின்கீழ் அவருடைய தத்துவங்களைப் பிரயோகித்தலில் அல்லது கடமைகளை புரிதலில் அல்லது அவை தொடர்பாக அவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தகவலை, இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும், அல்லது ஏதேனும் கடமையைப் புரியும் நோக்கத்திற்கு அத்தகைய தகவல் அவசியமான ஆளொருவர் தவிர்ந்த எந்தவோர் ஆளுக்காவது வெளிவிடும்; அல்லது

(உ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் விதியை மீறும் அல்லது அவற்றுடன் இணங்க மறுக்கும்,

ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியும் ஒவ்வோர் ஆளும், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

**வரிகளிலிருந்தும் தீர்வைகளிலிருந்தும் விலக்களித்தல்.**

28. அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய விலக்களிப்பை அங்கீகரிப்பின் முறியிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள்மீதான ஏதேனும் சுங்கத்தீர்வை அல்லது மதுவரிக்கொடுப்பனவிலிருந்து அதிகாரசபையானது விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**இச்சட்டம் எழுத்திலான வேறு சட்டத்தை மேலோங்கி நிற்றல்.**

29. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறு ஏதாவது சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும், பயனுடையதாதல் வேண்டும்; அதற்கிணங்க, இச்சட்ட ஏற்பாடுகளுக்கும் வேறு அத்தகைய சட்டத்திற்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை உள்ளவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## பாகம் VI

### நீக்கமும், நிலைபெயர்கால ஏற்பாடுகளும்

**1975 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.**

30. 1975 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அறிவியற் பேரவைச்சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

**நிலைபெயர்கால ஏற்பாடுகள்.**

31. நியமித்த தேதியன்று—

(அ) பழைய பேரவையின் சேவையிலுள்ள எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், அதிகாரசபையின் சேவையிலுள்ள அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு பழைய பேரவையின் சேவையில் வைத்திருந்த அல்லது அனுபவித்த சம்பளம் அல்லது கூலிகள், தொழிலிலிருந்து நீக்குதல், படிகள் அல்லது வேறு நன்மைகள் தொடர்பான நியதிகள் உட்பட, ஏறக்குறைய ஒத்த தரத்திலும் ஒத்த நியதிகளிலும் தமது பதவிகளை வகித்தல் வேண்டும்;

(ஆ) பேரவையினால் செய்யப்பட்ட முடிபுகளெல்லாம் அதிகாரசபையினால் செய்யப்பட்ட முடிபுகளாகக் கருதப்படுதல் வேண்டும்:

(இ) பேரவையினால், பேரவையுடன் அல்லது பேரவைக்காக உறப்பட்ட எல்லாக் கடன்களும், கடப்பாடுகளும், பொறுப்புக்களும், அதனால் நிறைவேற்றப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், வேறு சாதனங்களும் அத்துடன், செய்யப்பட்ட, ஏற்றீடுபட்டுள்ள எல்லாக் கருமங்களும் அலுவல்களும், அதிகாரசபையால் அதிகாரசபையுடன் அல்லது அதற்காக உறப்பட்டதாக, நிறைவேற்றப்பட்டதாக, செய்துகொள்ளப்பட்டதாக அல்லது செய்யப்பட ஏற்றீடுபட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறு ஏதாவது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமமைய, பேரவையினால் அல்லது அதற்கு எதிராகத் தொடரப்பட்ட அல்லது தொடரப்பட்டிருக்கக்கூடிய எல்லாக் குடியியல், குற்றவியல் தொடர்ச்சிகளும், குற்றவழக்குகளும் மேன்முறையீடுகளும் அல்லது வேறு சட்டமுறையான வழக்கு நடவடிக்கைகளும், அதிகாரசபையினால் அல்லது அதற்கு எதிராகத் தொடர்ந்து நடாத்தப்படுதல் அல்லது தொடரப்படுதல் வேண்டும்;

(உ) பேரவையின் சார்பாக அல்லது அதற்கு எதிராக தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட எல்லாத் தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், அதிகாரசபையின் சார்பாக அல்லது அதற்கெதிராகச் செய்யப்பட்டவனவாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஊ) பேரவைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் சட்டமுறையாகக் கொள்வனவு செய்யப்பட்ட, அல்லது கொள்ளப்பட்ட அல்லது அதற்குக் குத்தகைக்கு விடப்பட்ட, அல்லது அதன் தேவைக்கென விடப்பட்ட அல்லது வேறு ஏதாவது முறையில் கைமாற்றப்பட்ட அல்லது அதன் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும், நம்பிக்கைப் பொறுப்புக்கள், விதிப்புக்கள், பொறுப்புக்கள், ஒதுக்கங்கள், சேவகங்கள் அல்லது வேறு சேர்ந்தைகளுக்கமையவும் அத்துடன், அவைகளுடன் சேர்ந்த, இணைந்த அல்லது ஏற்புடையதாகும் நியதி நிபந்தனைகள்மீதும் அதிகாரசபையினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பில் அதிகாரசபைக்காக வைத்திருக்கப்படுதல் வேண்டும்;

(எ) பேரவையினால் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஏ) 1975 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அறிவியற் பேரவையின் 22 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கபபட்ட பேரவையின் நிதியம், அதிகாரசபையின் நிதியமாகக் கருதப்படுதல் வேண்டும்.

32. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய— பொருள் கோடல்.

"பேரவை" என்பது, 1975 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அறிவியற் பேரவையின்கீழ் தாபிக்கப்பட்ட பேரவை யென்று பொருளாகும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமசபை எனப் பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும், நிறைவேற்றப்படும் பணிகளையும், புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற, தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும், பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும், கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கம்பெனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும் கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினால் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடைய ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150, (வெளிநாடு) ரூபா 200, ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*